பணத்தை திருப்பிக்கேட்டு வற்பு விசாரணையில் தெரியவரும். சேலம் மா

11-01-2011

# கள் இறக்க அனுமதி கூடாது வேட்டுவ கவுண்டர் தீர்மானம்

**ஈரோடு:** 'கள் இறக்க அனுமதிக்க கூடாது' என, கொங்குநாடு வேட்டுவகவுண்டர் சங்க மற்றும் இளைஞரணி மாநில பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கொங்குநாடு வேட்டுவக்கவுண்டர் சங்கம் மற்றும் இளைஞரணி மாநில பொதுக்குழு கூட்டம் ஈரோட்டில் நடந்தது.

கொங்கு மண்டலத்தை தனியாக பிரித்து தனி மாநிலமாக்க வேண்டும் என்ற கோரிக்கை கண்டிக்கத்தக்கது. தமிழகத்தை பிரிக்க அனுமதிக்க கூடாது. காலிங்கராயன் வாய்க்கால் பாசன விவசாயிகளை பாதிக்கும் சாயக்கழிவு, தோல் கழிவு நீர் கலப்பதை தடுக்க வேண்டும். விவசாய விளை பொருட்களை அரசே நேரடியாக கொள்முதல் செய்ய வேண்டும். கரும்பு டன்னுக்கு 3,000 ரூபாய் என விலை நிர்ணயம் செய்ய வேண்டும்.

தமிழகத்தில் வேட்டுவகவுண்டர் சமுதாய மக்கள் 60 சட்டசபை தொகுதிகளில் பரவலாக உள்ளனர். சட்டசபை, லோக்சபா தொகுதியில் பிரதிநிதித்துவம் இல்லை. விகிதாச்சார அடிப்படையில் கட்சிகள் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும்.

மழைக்காலங்களில் காவிரி, பவானி, அமராவதி, பரம்பிகுளம், ஆழியாறு, நொய்யல் போன்ற அனைத்து ஆறுகளிலும் நீர் வீணாகி கடலுக்கு செல்கிறது. நீர்வழிப்பாதைகளை அமைத்து வீணாகும் நீரை திசை திருப்ப தடுப்பணைகள் கட்ட வேண்டும். தமிழகத்தில் கள் இறக்க அனுமதிக்க கூடாது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநில அமைப்பு செயலாளர் ஆறுமுகம் வரவேற்றார். மாநில பொது செயலாளர் செல்வக்குமார் தலைமை வகித்தார். மாநில தலைவர் மருதமுத்து கவுண்டர் பேசினார். மாநில பொருளாளர் தென்னரசு, மாநில செயற்குழு உறுப்பினர் சுந்தரமூர்த்தி உள்பட பலர் கலந்து கொண்டனர்.



ஈரோட்டில் நடந்த கொங்கு நாடு வேட்டுவ கவுண்டர் சங்கம் மற்றும் இளைஞரணி ஆறாவது மாநில மாநாட்டில், அமைப்பின் தலைவர் மருதமுத்து பேசினார். அருகில் மாநில பொதுச்செயலாளர் செல்வகுமார்.